**ஒதுக்கீட்டுத் தலைப்பு – 171 உயர் கல்வி அமைச்சு மற்றும் அந்த அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2012 ஆம் ஆண்டு**

இந்த அறிக்கை இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது.

1 ஆவது பகுதி- அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் கணக்குகள் சம்பந்தமான சுருக்கமான அறிக்கை

2 ஆவது பகுதி- ஒவ்வொரு ஒதுக்கீட்டுத் தலைப்பிற்கும் உரிய விபரமான அறிக்கை

## பகுதி 1

**உயர் கல்வி அமைச்சு மற்றும் அந்த அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் கணக்குகள் தொடர்பான சுருக்கமான அறிக்கை**

**1. அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்**

| செலவினத் தலைப்பு | திணைக்களப் பெயர் |
|---|---|
| 214 | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு |

**2. கணக்குகள்**

**2.1 ஓதுக்கீட்டுக் கணக்கு**

**(அ) மொத்த ஏற்பாடும் செலவும்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய ஏற்பாடு ரூபா 23,844,700,000 ஆனதுடன் மீளாய்வாண்டின் இறுதியில் இதில் ரூபா 20,886,307,364 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன்

பிரகாரம், அமைச்சினதும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தேறிய ஏற்பாடுகளுக்கான தேறிய சேமிப்பு ரூபா 1,412,737,166 தொகைக்கும் ரூபா 1,545,655,470 தொகைக்கும் இடையிலான வீச்சில் அதாவது மொத்த தேறிய ஏற்பாட்டில் 42 சதவீதத்திற்கும் 7.5 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சில் காணப்பட்டது. விபரம் பின்வருமாறாகும்.

| ஒதுக்கீட்டுத் தலைப்பு | அமைச்சு /திணைக்களம் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேறிய ஏற்பாடு | | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பயன்பாடு | | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சேமிப்பு | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மீண்டெழுபவை | மூலதனம் | மீண்டெழுபவை | மூலதனம் | மீண்டெழு பவை | மூலதனம் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 171 | உயர் கல்வி அமைச்சு | 922,000,000 | 2,425,200,000 | 721,972,509 | 1,212,490,325 | 200,027,491 | 1,212,709,675 |
| 214 | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு | 14,719,000,000 | 5,778,500,000 | 14,611,003,000 | 4,340,841,530 | 107,997,000 | 1,437,658,470 |
| | | 15,641,000,000 | 8,203,700,000 | 15,332,975,509 | 5,553,331,855 | 308,024,491 | 2,650,368,145 |

## 2.2 முற்பணக் கணக்குகள்

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சிற்கு அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட பின்வரும் எல்லைகள் பின்பற்றப்பட்டிருந்தன. விபரம் பின்வருமாறாகும்.

| தலைப்பு | விடய இல. | செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 171 | 17101 | 4,500,000 | 3,543,610 | 2,300,000 | 2,605,076 | 18,000,000 | 13,239,901 |

**2.3 பொது வைப்புக் கணக்குகள்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சின் பொது வைப்புக் கணக்கு மீதிகள் ரூபா 102,915,127 ஆனதுடன் இது தொடர்பான விபரம் பின்வருமாறாகும்.

| அமைச்சு | கணக்கு இல. | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| | | ரூபா |
| உயர் கல்வி அமைச்சு | 6000 /0000/00/0015/0018 | 102,915,127 |

## பகுதி II

## ஒவ்வொரு ஒதுக்கீட்டுத் தலைப்பிற்குரிய விபரமான அறிக்கை

**1. ஒதுக்கீட்டுத் தலைப்பு 171 – உயர் கல்வி அமைச்சு**

**1.1 கணக்காய்வின் நோக்கெல்லை**

உயர் கல்வி அமைச்சின் 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதியறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2013 ஆகஸ்ட் 14 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகளது, போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தது.

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணப்பட்டு வருதல், தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் பிரதான கணக்களிப்பு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பிக்கப்படுவதற்குரிய உள்ளகக்கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் நடாத்தலும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 1.3 கணக்காய்வு அவதானிப்புகள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பன இதன் (அ) முதல் (ஈ) வரையில் காண்பிக்கப்பட்டுள்ள பொது அவதானிப்புக்கள் மற்றும் 1.4 முதல் 1.8 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புகள் என்பவற்றை தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

### (அ) பாதீட்டு முரண்கள்

(i) 14 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 443,681,673 தொகையான மொத்த தேறிய ஏற்பாடும் எஞ்சியிருந்தது.

(ii) 09 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த காரணத்தால் ஏற்பாட்டைப் பயன்படுத்தியதை அடுத்து சேமிப்பு அச் செலவின விடயங்களுக்கு உரித்தான தேறிய ஏற்பாட்டில் 50 சதவீதத்திலிருந்து 99 சதவீதம் வரையான வீச்சு காணப்பட்டது.

(iii) வீரமன் முறைமையைப் பின்பற்றி செலவினத் தலைப்பின் கீழான 16 மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவின விடயங்களுக்கு மூல ஏற்பாடு 50 சதவீதத்திலிருந்து 2973 சதவீதம் வரையான அதிகரிப்பும் 06 செலவின விடயங்களின் மூல ஏற்பாடு 20 சதவீதத்திலிருந்து 42 சதவீதம் வரையான குறைப்பும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**(ஆ) அரச செலவின முகாமைத்துவம்**

2012 ஆம் ஆண்டிற்காக பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த மதிப்பீட்டின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகளில் 2011 திசெம்பர் 30 ஆம் திகதிய 155 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் மேற்கொள்ளப்பட்ட ஏற்பாட்டில் மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினங்கள் முறையே இரண்டு சதவீதமும் ஒன்பது சதவீதமும் சேமிக்கப்பட வேண்டிய போதிலும் அமைச்சால் அவ்வாறு ஏற்பாடு சேமிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) பொது வைப்புக் கணக்கு**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் புதிய மாணவர்களின் தலைமைத்துவ பயிற்சி மற்றும் நேர் மனப்பான்மை நிகழ்ச்சித்திட்டத்திற்காக ஆண்டின் போது அமைச்சிற்கு வழங்கப்பட்ட ரூபா 204.6 மில்லியன் தொகையில் எஞ்சியிருந்த தொகையான ரூபா 62.8 மில்லியன் தொகை 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் திறைசேரியின் அங்கீகாரம் இன்றி பொது வைப்புக் கணக்கில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

**(ஈ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று**

(i) 17101 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் படி அத்தினத்தில் அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 323,007 ஆனதுடன் நிலுவையான மீதியை அறவிடுவதற்கு முடியாதிருந்தது.

(ii) 2012 ஒக்டோபர் 01 ஆம் திகதி முதல் சம்பளமற்ற விசேட லீவைப் பெற்றுள்ள கணக்காளரின் ரூபா 752,434 தொகையான கடன் தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிராததுடன் இத் தொகை மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு முற்பணக் கணக்கில் ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதியில் காண்பிக்கப்பட்டிருந்தது.

## 1.4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 1.4.1 கூட்டிணைந்த திட்டம்

சகல அமைச்சுச் செயலாளர்கள், மாகாண சபை தலைமைச் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி அதிகாரசபைத் தலைவர்களுக்கு விலாசமிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆம் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டிலிருந்து எதிர்வரும் ஆகக் குறைந்தது 03 ஆண்டுகளுக்காக கூட்டிணைந்த திட்டம் ஒன்று ஆண்டின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத் திட்டம் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. 2013 யூலை 03 ஆம் திகதியே தயாரிக்கப்பட்டிருந்தது.

### 1.4.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

மேற்குறிப்பிடப்பட்ட 1.4.1 இல் குறிப்பிடப்பட்ட அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட 2002 செப்தெம்பர் 12 மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆம் திகதிய 402 மற்றும் 402(1) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியாண்டு பூர்த்தியடைந்து 150 நாட்களுக்குள் அமைச்சால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான ஒரு பிரதியுடன் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் 09 மாத காலத்திற்கு மாத்திரம் உரித்தான செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 1.4.3 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆம் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த கொள்வனவுத் திட்டங்கள் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. இது 2013 சனவரி 28 ஆம் திகதியே தயாரிக்கப்பட்டிருந்தது.

### 1.5 சொத்து முகாமைத்துவம்

### 1.5.1 வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்தப்படல்

2010 திசெம்பர் 17 ஆம் திகதிய பீஎப்/மெய்மையாய்வு /01 ஆம் இலக்க அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் மூலம் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆம் திகதிய 441 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2013 மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்டு அவ்வறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அமைச்சினால் அவ்வறிக்கை 2013 மே 31 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.5.2 ஒப்படைக்கப்படாத சொத்துக்களின் முறையற்ற விதத்தில் பயன்படுத்தல்

2011 பெப்ரவரி மாதம் ஊழியர் மற்றும் ஊழியர் தொடர்பாடல் அமைச்சால் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனம் அமைச்சிற்குக் கையேற்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.5.3 தீர்க்கப்படாத பொறுப்புகள்

அமைச்சால் 2012 திசெம்பர் 31 வரை தீர்க்கப்படாத ஒரு வருடத்திற்கும் குறைவான பொறுப்புகள் ரூபா 31,942,593 ஆகக் காணப்பட்டன.

### 1.6 இணங்காமைகள்

#### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசீலனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் விபரிக்கப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | நிதிப் பிரமாணம் | | |
| | (i) நி.பி. 94 | 10,206,792 | ஏதேனும் ஓர் நிறுவனத்தால் ஏற்கப்படும் செலவின அளவும் ஏற்கப்படும் பொறுப்பு அளவும் எப்போதும் நிதியாண்டிற்காக ஏற்பாட்டை விஞ்சலாகாத போதிலும் 19 செலவின விடயங்களுக்கு உரித்தான ஏற்பாட்டிற்கு மேலாக பொறுப்புக்கள் ஏற்பட்டிருந்தன. |
| | (ii) நி.பி. 104 | | வாகன நட்டங்களும் சேதங்களும் கணக்காய்வாளர் தலைமை அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (iii) நி.பி. 1645 (ஆ) | | 268 பொதுப் படிவத்தின் பிரகாரம் நாளாந்த ஓட்டக் குறிப்புகள் மேற்பார்வை உத்தியோகத்தரால் நாளாந்தம் பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 1997 சனவரி 24 ஆம் திகதிய 116 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | | பொது முயற்சிகள் சுற்றறிக்கை 116 இற்கு முரணாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மூன்று உத்தியோகத்தர்களும் இலங்கை உயர் தொழிநுட்ப கல்வி நிறுவகத்தின் அமைய ஊழியர்கள் மூவரும் 21 ஆம் நூற்றாண்டில் உயர் கல்விச் செயற்திட்ட உத்தியோகத்தர்கள் பதினைந்து பேரும் உயர் கல்வி அமைச்சின் உத்தியோகபூர்வ நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2011 பெப்ரவரி 21 ஆம் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை 449 (ஈ) | 414,500 | அரச சேவைகள் வழங்கப்படுவதற்காக கட்டணக் கொடுப்பனவு செய்யப்படும் அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர்கள் நால்வருக்காக கொடுப்பனவு செய்யப்படுவதற்கு அமைச்சுச் செயலாளரின் தனிப்பட்ட அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 1.7 செயற்திட்ட அமுலாக்கலிலான நலிவுகள்

### 1.7.1 இருபத்தோராம் நூற்றாண்டில் உயர் கல்விச் செயற்திட்டம்

இருபத்தோராம் நூற்றாண்டில் உயர் கல்விச் செயற்திட்டக் கடன் உடன்படிக்கையின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ஐக்கிய இராச்சிய டொலர் மில்லியன் 40 ஆகும். சர்வதேச அபிவிருத்தி சங்கத்தால் இத் தொகை நிதியிடப்படுகின்றது. இதில் 4 கூறுகள் உள்ளடக்கப்பட்டுள்ளது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2010 நவம்பர் 01 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2015 திசெம்பர் 31 ஆம் திகதி பூர்த்திசெய்யப்படுவதற்கு இருந்து. கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட விடயங்கள் பின்வருமாறாகும்.

#### (அ) நிதிச் செயலாற்றல்

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான செயற்திட்டச் செலவினம் ரூபா 655,634,292 ஆகக் காணப்பட்ட போதிலும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 906,222,843 ஆகக் காணப்பட்டது.

#### (ஆ) சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

2012 ஆம் ஆண்டின் போது இரு வாகனங்கள் வாடகைக்கு எடுக்கப்படுவதற்காக வாடகைக் கட்டணமாக ரூபா 1,320,000 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டச் செயற்பாடுகளுக்காக அவ்

வாகனப் பயன்பாடு தொடர்பான விபரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

2012 ஆம் ஆண்டிற்காக செயற்திட்ட வாகனங்களின் எரிபொருள் செலவினமாக ரூபா 2,891,547 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் இவ் வாகன ஓட்டம் தொடர்பான ஓட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் ஆகியவற்றுடன் இணங்காமை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) வழங்கப்பட்ட எனினும், 06 மாதங்களுக்கு மேலான காலமாக கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராத ரூபா 180,000 கூட்டுத்தொகையான 05 காசோலைகள் நிதிப் பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) உலக வங்கியின் எழுத்து மூல அங்கீகாரம் இன்றி 2007 ஏப்ரல் 05 ஆம் திகதிய 33 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 4.2.1 ஆம் 4.2.4 ஆம் பந்திகளுக்கு முரணாக 05 உத்தியோகத்தர்களின் சம்பளம் உரிய சம்பளப் படிநிலையில் வைக்கப்படுவதற்குப் பதிலாக உச்ச சம்பளப் படிநிலையில் வைக்கப்பட்டிருந்ததுடன் ஒரு மாதத்திற்கு ரூபா 40,000 படி மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

**(உ) நிதியப் பயன்பாடு**

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக செயற்திட்டக் கூறின் பிரகாரம் செயலாற்றல் தொடர்பான ஓர் பொழிப்பு பின்வருமாறாகும்.

| விபரம் | அங்கீகரிக்கப்பட்ட ஏற்பாடு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான உள்ளபடியான செலவினம் | அங்கீகரிக்கப் பட்ட ஏற்பாட்டின் சதவீதமாக பயன்பாடு |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | % |
| உயர் கல்விப் பிரிவிற்காக தேசிய உயர் கல்வித் தகைமைக் கட்டமைப்பை விருத்திசெய்தல் | 6,500,000 | 762,288 | 12 |
| ஒட்டுமொத்த உயர் கல்விப் பிரிவிற்காக தரச் சான்றிதழ் பொறிமுறையை ஸ்தாபித்தல் | 21,000,000 | 9,551,965 | 45 |
| **மொத்தம் - 1 கூறு** | **27,500,000** | **10,314,253** | **38** |
| | ========= | ========= | |
| பல்கலைக்கழக அபிவிருத்தி மானியம் (UDG) | 200,000,000 | 206,152,021 | 103 |
| தர மற்றும் புத்தாக்க மானியம் | 12,000,000 | 9,513,189 | 79 |
| **மொத்தம் - 2 கூறு** | **212,000,000** | **215,665,210** | **102** |
| | ========= | ========= | |
| இலங்கை உயர் தொழிநுட்ப நிறுவக நிகழ்ச்சித்திட்டத்தை நவீனமயமாக்கலும் முகாமைத்துவம் செய்தலும் | 20,000,000 | 9,380,984 | 47 |
| உயர் தொழிநுட்ப நிறுவகத்திற்கு நுழையும் பிராந்திய நியாயத்தன்மையை மேம்படுத்தல் | 217,900,000 | 178,452,093 | 82 |
| **மொத்தம் - 3 கூறு** | **237,900,000** | **187,833,077** | **79** |
| கல்வி, முகாமைத்துவ மற்றும் தொழிநுட்ப பதவியணியின் மனிதவள அபிவிருத்தி | 117,100,000 | 115,469,828 | 99 |
| **கொள்கை, கல்வி, ஆய்வு, அமுலாக்கல், மதிப்பீடு, தொடர்புபடுத்தல் மற்றும் தொடர்பாடல்** | **155,500,000** | **126,351,924** | **81** |
| **மொத்தம் - 4 கூறு** | **272,600,000** | **241,821,752** | **89** |
| | ---------------- | ----------------- | ----- |
| **மொத்தக் கூட்டுத்தொகை** | **750,000,000** | **655,634,292** | **87** |
| | ========= | ========= | |

**(ஊ) செயற்திட்டத்தின் பௌதீக செயலாற்றல்**

கூறின் படி செயற்திட்டத்தின் பௌதீக செயலாற்றல் பின்வருமாறாகும்.

(I) உயர் கல்விப் பிரிவிற்கான நியதிகள் நிறுவகமயமாக்கல்

உயர் கல்விப் பிரிவிற்கான நியதிகளை நிறுவகமயமாக்கலின் கீழ் இலங்கை உயர் கல்விப் பிரிவிற்காக தேசிய தகைமைக் கட்டமைப்பை விருத்தி செய்து நிறுவகக் கட்டமைப்பு தொடர்பான தரச் சான்றிதழ் முறையொன்றை ஸ்தாபிப்பது 2012 ஆம் ஆண்டின் இறுதியில் பூர்த்திசெய்யப்பட வேண்டிய போதிலும் உயர் கல்வி நிறுவகத்தில் ஸ்தாபிக்கப்பட்டு செயற்படுத்தப்படுவதற்கு 2012 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(II) கற்பித்தல் மற்றும் கற்றல் நிலைகளை மேம்படுத்தல்

(i) பல்கலைக்கழக அபிவிருத்தி மானியம்

பல்கலைக்கழக அபிவிருத்தி மானிய பொருளாதாரத்திற்கு உரித்தான உயர் கல்வி அபிவிருத்தி செய்யப்படுவதற்காக சகல பல்கலைக்கழகங்களிலும் குறிப்பாக முக்கிய காரணியாக செயற்திட்டத்தால் இனங்காணப்பட்ட துறைக்காக உதவியளிக்கப்படுகிறது.

செயற்திட்ட உதவியானது,

- மாணவர்களின் ஆங்கில மொழித் திறனை விருத்தி செய்வதற்கு
- தகவல் தொழிநுட்ப திறன் விருத்தி செய்வதற்கு
- பட்டதாரி மாணவர்களின் மென்பொருள் திறனை விருத்தி செய்வதற்கு
- சனநாயக ஒருங்கிணைப்பை மேம்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டது.

செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த திட்டத்தின் பிரகாரம், 03 ஆண்டுகளுக்குள் மேற்குறித்த செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக ஒவ்வொரு பல்கலைக்கழகங்களுக்கும்

ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தன. முதல் இரு ஆண்டுகளுக்காகவும் ஒதுக்கப்பட்ட ஏற்பாட்டில் 2012 ஆம் ஆண்டின் இறுதி வரை ஏற்பாட்டின் பயன்பாடு 0 சதவீதம் முதல் 54 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. கூறின் படி நிதி முன்னேற்றம் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் பௌதீக முன்னேற்றம் உரிய அறிக்கைகளில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. விபரம் பின்வருமாறாகும்.

| பல்கலைக்கழகம் | ஏற்பாடு | உள்ளபடியான செலவினம் | பயன்பாட்டு சதவீதம் % |
|---|---|---|---|
| கொழும்பு | 73,870,000 | 30,194,362 | 41 |
| கிழக்கு | 37,280,000 | 1,129,721 | 3 |
| கம்பஹா விக்ரமாரச்சி | 2,969,000 | 1,038,936 | 35 |
| சுதேச மருத்துவ நிறுவகம் | 5,534,000 | 199,000 | 4 |
| யாழ்ப்பாணம் | 67,229,500 | 1,085,878 | 2 |
| ஸ்ரீ ஜயவர்தனபுர | 83,042,000 | 898,760 | 1 |
| களனி | 65,130,000 | 31,496,587 | 48 |
| மொறட்டுவை | 38,100,000 | 10,457,363 | 27 |
| திறந்த | 31,333,000 | 5,583,344 | 18 |
| பேராதனை | 80,556,000 | 137,000 | 0.2 |
| றுஹுணு | 56,490,000 | 10,447,915 | 18 |
| ரஜரட்ட | 46,300,000 | 5,733,120 | 12 |
| சப்ரகமுவ | 27,539,500 | இல்லை | 0 |
| தென்கிழக்கு | 22,405,000 | 10,303,367 | 46 |
| சுவாமி விபுலானந்த நிறுவகம் | 9,000,000 | 230,986 | 3 |
| ஊவா வெல்லஸ்ஸ | 14,075,000 | 3,127,347 | 22 |
| அழகியற் கலை | 23,720,200 | 6,231,753 | 26 |
| வடமேல் | 19,146,000 | 10,337,337 | 54 |

(ii) தர மற்றும் புத்தாக்க மானியம்

தர மற்றும் புத்தாக்க மானியத்தின் மூலம் பல்கலைக்கழகங்களின் முறைமை கல்வி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு உதவியளிக்கப்பட்டதுடன் பட்டதாரிகளின் தொழில் தருனர்களுக்கும் தொழிநுட்ப வணிக அலுவலக மற்றும் வியாபார நிலையங்கள் ஆகியவற்றில் பல்கலைக்கழக ஒருங்கிணைப்புகளை உறுதிப்படுத்தும் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்காக இவ் ஏற்பாடு 04 கட்டங்களின் கீழ் பாடவிதான மீளாக்கம், கற்பித்தலின் நவீனத்துவம், கற்பித்தல் மற்றும் மதிப்பீட்டு முறை, புத்தாக்க நடைமுறைகள் ஆகிய செயற்பாடுகளை மேற்கொள்வதற்காகப் பயன்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் இச் செயற்பாட்டிற்காக கொழும்பு, களனி மற்றும் பேராதனைப் பல்கலைக்கழகங்களுக்கு முதல் 02 ஆண்டுகளின் போது ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஏற்பாட்டில் 2012 ஆம் ஆண்டின் இறுதி வரையான பயன்பாடு 01 சதவீதம் முதல் 15 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. விபரம் பின்வருமாறாகும்.

| பல்கலைக்கழகம் | பீடம் | ஏற்பாடு | உள்ளபடியான செலவினம் | பயன்பாட்டின் சதவீதம் |
|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | |
| கொழும்பு | கல்வி | 19,868,660 | 160,000 | 1 |
| | மருத்துவம் | 23,835,500 | 189,398 | 1 |
| | விஞ்ஞானம் | 21,949,000 | 1,375,000 | 6 |
| களனி | மனிதவளக் கல்வி | 22,728,500 | 576,710 | 3 |
| | விஞ்ஞானம் | 24,592,000 | 1,408,535 | 6 |
| பேராதனை | விவசாயப் பட்டப்பின்படிப்புக் கல்வி நிறுவகம் | 22,096,000 | 3,375,651 | 15 |
| | விஞ்ஞானப் பட்டப்பின்படிப்புக் கல்வி நிறுவகம் | 22,506,500 | 2,427,894 | 11 |

## (III) இலங்கை உயர் தொழிநுட்ப கல்வி நிறுவக நவீனமயமாக்கல்

இலங்கை உயர் தொழிநுட்ப கல்வி நிறுவகம் மற்றும் இலங்கை உயர் தொழிநுட்ப கல்வி நிறுவகத்தின் கீழ் செயற்படும் நிறுவகத்தை நவீனமயமாக்கும் நோக்கில் இருபத்தோராம் நூற்றாண்டிற்காக உயர் கல்வி செயற்திட்டத்தின் மூலம் நவீனமயமாக்கல் நிகழ்ச்சித்திட்டமொன்று சமர்ப்பிக்கப்பட்டது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) இலங்கை உயர் தொழிநுட்ப கல்வி நிறுவகத்தை விருத்தி செய்வதற்காக தலைமைத்துவ மற்றும் தர அபிவிருத்தி நிலையம் (Leadership and Quality Development Centre – LQDC) ஸ்தாபிக்கப்படுவதற்கு செயற்திட்டம் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அதன் நடவடிக்கைகள் 2013 மே 31 வரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2012 நவம்பர் மாத்தின் போது இரத்தினபுரி உயர் தொழிநுட்ப நிறுவகத்தின் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2012 சனவரி 22 ஆம் திகதி செயற்திட்டப் பணிப்பாளரின் கடிதத்தின் படி, காலப்பகுதி 2013 சனவரி 29 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், 2013 மே 31 வரை இக் கட்டிடம் பூர்த்திசெய்யப்பட்டு இலங்கை உயர் தொழிநுட்ப கல்வி நிறுவகத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) வவுனியா உயர் தொழிநுட்ப நிறுவகத்தின நிர்மாணப் பணிகள் 2013 சனவரி மாதம் பூர்த்திசெய்யப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், ஒப்பந்தக்காரர்களின் கோரலின் படி நிர்மாணிப்பு காலப்பகுதி 2013 மார்ச் 31 வரை நீடிக்கப்பட்டிருந்த போதிலும் 2013 மே 31 வரை நிர்மாணிப்பு வேலைகளை பூர்த்தி செய்து இலங்கை உயர் தொழிநுட்ப கல்வி நிறுவகத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

**(IV) மனித வள அபிவிருத்தி, செயற்படுத்தல் மற்றும் மதிப்பீடு, கல்வி மற்றும் தொடர்பாடல்**

(i) இக் கூறின் இலக்கான உயர் கல்விப் பிரிவின் ஒழுங்கமைப்பு இயலளவு மனிதவள உறுதிப்படுத்தல் மற்றும் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு, கொள்கைப் பகுப்பாய்வு மற்றும் விரிவாக்கலை மேம்படுத்துவதற்காக ரூபா 143,839,576 தொகையான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 90,549,493 தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ii) செயற்திட்டத்தால் மேற்கொள்ளப்பட்ட பட்டப்பின்படிப்பு பட்டத்திற்காக மானியங்களில் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பல்கலைக்கழகங்களிலும் உயர் தொழிநுட்ப நிறுவகங்களினதும் முன்னேற்றம் முறையே 88 சதவீதமாகவும் 22 சதவீதமாகவும் காணப்பட்டது.

(iii) விபரம் பின்வருமாறாகும்.

| நிறுவகம் | மதிப்பிடப்பட்ட நலனாளிகளின் எண்ணிக்கை | மானியங்கள் வழங்கப்பட்ட நலனாளிகளின் எண்ணிக்கை | முன்னேற்றம் சதவீதம் |
|---|---|---|---|
| பல்கலைக்கழகம் | 149 | 131 | 88 |
| இலங்கை உயர் தொழிநுட்ப கல்வி நிறுவகம் | 100 | 22 | 22 |

### 1.7.2 தொழிநுட்ப கல்வி மேம்படுத்தப்படுத்தலும் நாளதுவரையாக்கப்படுவதற்கான செயற்திட்டம்

தொழிநுட்ப கல்வி மேம்படுத்தப்படுத்தலும் நாளதுவரையாக்கப்படுவதற்கான செயற்திட்டக் கடன் உடன்படிக்கையின் பிரகாரம் உயர் கல்வி அமைச்சுச் செயற்திட்டம் செயற்படுத்தல் முகவர் நிறுவகமாகும். இச் செயற்திட்ட நோக்கம் மட்டக்குளி மற்றும் லபுதுவ உயர் தொழிநுட்ப நிறுவகத் தொழிநுட்ப கல்வி மேம்பாடு மற்றும் நாளதுவரையாக்கப்படுகின்றது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்திற்காக கடனாக மிஸ்டிரியா அரசாங்கத்திலிருந்து யூரோ 11,000,000 தொகையும் நெதர்லாந்து அரசாங்கத்தால் யூரோ 8,175,022 வழங்கப்படுவதற்கு உடன்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக முக்கியமாக நெதர்லாந்து அரசாங்கத்தால் யூரோ 2,724,978 நிதி வழங்கலுக்கு உடன்பட்டிருந்தது. இதன் பிரகாரம் செயற்திட்டத்தின் மொத்த கடனும் மானியப் பெறுமதியும் ரூபா 21.9 மில்லியனாகும்.

செயற்திட்ட செயற்பாடு 2008 திசெம்பரில் ஆரம்பிக்கப்பட்டு 2011 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவுற்ற போதிலும் 2011 நிதி அறிக்கை மற்றும் செயற்திட்ட இறுதி அறிக்கை 2013 யூலை வரை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

## 1.8 மனித வள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை மற்றும் உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் எண்ணிக்கை தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 24 | 16 | 08 |
| (ii) | மூன்றாம் மட்டம் | 02 | - | 02 |
| (iii) | இரண்டாம் மட்டம் | 99 | 78 | 21 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 40 | 37 | 03 |
| (v) | ஏனைய (அமைய/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 07 | 05 | 02 |
| | மொத்தம் | 172 | 136 | 36 |

## 2. ஒதுக்கீட்டுத் தலைப்பு 214 – பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

### 2.1 கணக்காய்வின் நோக்கெல்லை

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதியறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகளது, போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தது.

## 2.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணப்பட்டு வருதல், தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பிக்கப்படுவதற்குரிய உள்ளகக்கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் நடாத்தலும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2.3 கணக்காய்வு அவதானிப்புகள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பன இதன் (அ) இன் அவதானிப்புக்கள் மற்றும் 2.4 மற்றும் 2.5 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புகள் என்பவற்றை தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

### (அ) பாதீட்டு முரண்கள்

2012 ஆம் ஆண்டின் போது மூலதனச் செலவினத்திற்கான ஏற்பாட்டுத் தொகையில் 25 சதவீதமான ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

## 2.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 2.4.1 கூட்டிணைந்த திட்டம்

சகல அமைச்சுச் செயலாளர்கள், மாகாண சபை தலைமைச் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி அதிகாரசபைத் தலைவர்களுக்கு விலாசமிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆம் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டிலிருந்து எதிர்வரும் ஆகக் குறைந்தது 03

ஆண்டுகளுக்காக கூட்டிணைந்த திட்டம் ஒன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஆண்டின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் 2012 – 2015 இற்காக இத் திட்டம் நாளதுவரையாகத் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4.2 வருடாந்த அறிக்கை

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியாண்டு பூர்த்தியடைந்து 150 நாட்களுக்குள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்குரிய வருடாந்த அறிக்கை 2013 நவம்பர் 08 ஆம் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.5 மனித வள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை மற்றும் உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் எண்ணிக்கை தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 49 | 41 | 08 |
| (ii) | இரண்டாம் மட்டம் | 156 | 121 | 35 |
| (iii) | ஆரம்ப மட்டம் | 51 | 48 | 03 |
| | மொத்தம் | 256 | 210 | 46 |